DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 158/2017**

| Deposition of the | : | PW2 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | மங்களம் | Age | : | 61 |
| H/N | : | தம்பித்துரை | Occupation | : | தலைமை எழுத்தர் மகிளா நீதிமன்றம், இராமநாதபுரம் (ஓய்வு) |
| Village | : | சேதுபதி நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 03-rd day of November 2022.

**03.11.2022.**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மகிளா நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து ஓய்வு பெற்று இராமநாதபுரம் சேதுபதி நகரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். மற்றொரு எதிரியான மனோகரனை தெரியும். 09.07.2012–ம் தேதியிலிருந்து குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வந்தபோது பிறப்பு இறப்பு சம்பந்தப்பட்ட மனுக்கள் மீது போலியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது சம்பந்தமாக அ.சா.1 அவர்களால் புகார் கொடுக்கப்பட்ட விவரம் தெரிந்து கொண்டேன். அந்த புகார் சம்பந்தமாக யார் மீது என்ன மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 09.07.2012–ம் தேதி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வந்தபோது என் தலைமையின் கீழ் 11 அலுவலக பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்றும், அவர்களில் ரவிச்சந்திரன் என்பவர் குற்றவியல் நடுவர் நீதிமன்ற கிளார்க்காக பணிபுரிந்து வந்தார் என்றும், அவருடைய பணிகள் திறந்தவெளி நீதிமன்றத்தில் நடைபெறும் பணிகளை செய்வது என்றும் இந்நிலையில் இவருடன் RC, தட்டச்சர் மற்றும் OA

ஆகியோர்களும் பணி செய்த மற்றவர்கள் அலுவலக பணியை செய்து வந்தார்கள் என்றும் இவர்களில் Steno மற்றும் தட்டச்சர் நடுவர் அவர்களின் உத்தரவையும் மற்றும் அலுவலக பணிகளையும் செய்து வந்தார்கள் என்றும்,. தலைமை குற்றவியல் நீதிபதி அவர்களின் குறிப்பாணை பெற்ற பின்பு தான் போலியான பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது என்று எனக்கு தெரிய வந்தது என்றும், பிறப்பு மற்றும் இறப்பு சம்பந்தப்பட்ட சான்று வழங்குவது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் தட்டச்சர் மனோகரன், Magistrate clerk ரவிச்சந்திரன், RC மற்றும் Despatch Clerk ஆகியோர்கள் போலியாக உத்தரவுகளை தயார் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி MC ரவிச்சந்திரன் மற்றும் தட்டச்சர் மனோகரன் இவர்களை போலியான நீதிமன்ற முத்திரை மற்றும் Magistrate திருமதி. K. பழனியம்மாள் அவர்களின் கையெழுத்தை போலியாக செய்து பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் தயார் செய்தமைக்கு தற்காலிக பணி நீக்கம் செய்த விவரமும் தெரியும் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது முதல் விசாரணையில் கூறிய விவரத்தையே தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான்.

<u>நீதிமன்ற கேள்வி</u>

ஆஜர் எதிரி நீதித்துறை நடுவரின் உதவியாளராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். ஆஜர் எதிரியை தற்காலிக பணி நீக்கம் செய்த விவரம் எனக்கு தெரியாது. நடுவர் நீதிமன்றத்தில் நீதிபதிக்கு அடுத்த நிலையான பொறுப்பு தலைமை எழுத்தர் பொறுப்பு என்றால் சரிதான். அதனால் ஆஜர் எதிரியை தற்காலிக பணி நீக்கம் செய்தது பற்றி உங்களுக்கு தெரியும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. யார் போலியான உத்தரவுகளை தயாரித்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

(ஒப்பம்/–க. பிரபாகரன்)
**நீதித்துறை நடுவர் எண். II**
**இராமநாதபுரம்**